8. மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கிய கரூர் மாவட்டம், திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழுவினருக்கு ரூபாய் பத்து இலட்சம் வழங்கியது— மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அதில் என்ன இருக்கிறது? சொல்லுங்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *கல்லூரியில் படிக்கின்ற அந்த மாணவர்களும் இஸ்ரோ அதிகாரிகளுக்கு உதவியாக இருந்து, விண்ணில் ஏவப்பட்ட விண்கலத்தில் அவர்களும் பங்கேற்றிருக்கிறார்கள் என்பதை இந்த சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.*

திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டியைச் சேர்ந்த முகம்மது சாருக் ரிஃபாத் ராஜ், உலகிலேயே மிகச் சிறிய செயற்கைக்கோளை உருவாக்கி, "கலாம் சாட்" என பெயரிட்டு அமெக்காவின் "நாசா" விண்வெளி அமைப்பு ராக்கெட்மூலம் இந்த செயற்கைக்கோள் பறக்கவிடப்பட்டு, தமிழகத்திற்கும், அரவக்குறிச்சி தொகுதிக்கும், பள்ளப்பட்டிக்கும் பெருமை சேர்த்துள்ள அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசிற்கும், பள்ளப்பட்டி மக்களின் சார்பாகவும், அரவக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும், முகம்மது சாருக் ரிஃபாத் ராஜ் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது பணி சிறக்க, தமிழக அரசின் சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பிலும் வாழ்த்துகளை கூறியது அவருடைய பணிக்கு, அவருடைய செயல்பாட்டிற்கு இன்னும் மிகுந்த வேகத்தைக் கொடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொண்டு, அவருடைய தேவைகளை அவரிடத்திலே*

கேட்டறிந்து இன்னும் முழுமையாக அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் வைத்து நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். என்ன? சொல்லுங்கள், சரி சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கு நன்றி சொல்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1–20

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியைச் சார்ந்த, அந்த இளம் விஞ்ஞானிகள் சம்பந்தமாக இதே அவையில் நேற்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். இன்று அந்த இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கின்றவகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அந்த விஞ்ஞானிகளுக்கு பத்து இலட்சம் ரூபாய் நிதியினை வழங்கி, கௌரவித்திருக்கிறார்கள். அந்த இளம் விஞ்ஞானிகளுடைய சாதனைகள் தொடர வேண்டுமென்று அவர்களை வாழ்த்தி, அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கிய தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது மாவட்டத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

6. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை
(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை
} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*